0 9 DEC 2025

# 2024 ஆகஸ்ட் 19 அன்று 'சோசலிச  மக்கள் ஒன்றியத்தின் 'இரண்டாவது மாநாட்டில் திருத்தப்பட்ட - ஜனஅரகல கூட்டமைப்பின் (மக்கள் போராட்டக் கூட்டமைப்பு)யாப்பு

## 1. பெயர்

- 'ஜனஅரகல கூட்டமைப்பு' (மக்கள் போராட்டக் கூட்டமைப்பு) என்பதாகும்.
- இதன் பின்னர், இது 'கூட்டமைப்பு' என்று குறிப்பிடப்படும்.

## 2. பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

- இல. 136, பன்சல வீதி, களுத்துறை வடக்கு, இலங்கை.

## 3. குறிக்கோள்கள்

- இலங்கையில் நிலவும் முதலாளித்துவ சமூக அமைப்பை ஒரு புரட்சிகர மாற்றத்திற்கு உட்படுத்தி, சமூகத்தின் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் புரட்சிகர சக்தியைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஒரு சோசலிச சமூகத்தை உருவாக்குவதற்காகப் போராடுதல்.
- அதற்காக, இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட, ஒழுங்கமைக்கப்படாத, தொழிலாள, விவசாய, மீனவ மக்களையும், தமிழ், முஸ்லிம், மற்றும் ஏனைய ஒடுக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களையும் பலப்படுத்தி, அவர்களது சொந்த அரசியல் இயக்கத்தின் மூலம் சமத்துவம், நீதி, மனிதநேயம், ஜனநாயகம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காகப் போராடுதல். அதற்காக, உழைக்கும் மக்களின் அரசை நிறுவுவதற்காக உழைக்கும் மக்களை வழிநடத்துதல்.
- அந்தந்த தொழில்களுக்கு இடையே சமமான பிரதிநிதித்துவத்தை வெளிப்படும் வகையில், பிரதிநிதித்துவ அரசியல் சபை மூலம் நாட்டை ஆளும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டாக்கச் சபை ஒன்றை நிறுவுவதற்காகப் போராடுதல்.
- உலக வல்லரசு முகாம்களிலிருந்து  விடுபட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் ஒத்திசைவான அரசியல் இயக்கங்களுடன் இணைந்து ஒரு பசுமை சோசலிச உலகத்திற்காகப் போராடுதல்.
- சர்வதேச பாட்டாளி வர்க்கப் போராட்டங்களின் அனுபவங்களைப் பயன்படுத்தி, வர்க்கப் போராட்டத்தின் **சர்வதேச ஒற்றுமையை** கட்டியெழுப்புதல் மற்றும் **பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை** நிலைநாட்டுவதற்காகப் பங்களித்தல்.

## 4. உறுப்புரிமை

- ‘கூட்மைப்பின் ‘ஓர் உறுப்பினர் வேறு எந்த அரசியல் கட்சியிலும் உறுப்புரிமை வகிக்க முடியாது.

- உறுப்பினர், கூட்டமைப்பின் ஓர் கிளையுடன் இணைந்திருக்க வேண்டும். தீர்மானங்ளை எடுக்கும் போது வாக்களிக்கும் உரிமை உண்டு. அவர் கூட்டமைப்பின் மத்திய குழுவிற்குப் போட்டியிடும் உரிமையையும் பெறுவார்.
- வெளிநாடுகளில் உள்ள தோழர்களின் உறுப்புரிமையின் தரப்படுத்தல் மத்திய குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது.
- மத்திய குழுவின் விசேட அனுமதியின் பேரில், கூட்டமைப்பின் வெளிப்படையான உறுப்பினராக இருக்கக்கூடாது என்று முடிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தைத் தவிர, அவர் கூட்டமைப்பின் ஒரு கிளையுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

## 5. கூட்டணியின் கிளைகள்

- தொழில்முறை மட்டத்திலோ அல்லது எந்தவொரு புவியியல் அடிப்படையிலோ கூட்டமைப்பின் கிளைகளை உருவாக்கலாம்.கூட்டமைப்பின் பல கிளைகள் இணைந்து மாவட்ட சபையாகச் செயற்படுவது மத்திய குழுவின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

## 6. மாநாடு

- கூட்டமைப்பின் உயர் சபை பிரதிநிதிகள் மாநாடு ஆகும்.இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மாநாடு நடத்தப்பட வேண்டும்.கூட்டமைப்பின் தொலை நோக்கு மற்றும் அரசியல் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் மாநாட்டிற்கு உள்ளது. அரசியல் தீர்மானம், சர்வதேச தீர்மானம் மற்றும் அமைப்புத் தீர்மானம் அதற்காக வழிகாட்டும்.
- உறுப்பினர்களின் **1/3** பேர் கோரும் பட்சத்திலோ அல்லது விசேட சூழ்நிலைகளில் மத்திய குழுவின் பெரும்பான்மை ஒப்புதலுடன் இடைக்கால மாநாட்டைக் கோரும் பட்சத்திலோ விசேட மாநாடு கூடுவதற்கான உரிமை உண்டு.
- மாநாட்டின் கூட்ட நிறைவெண் (கோரம்) உறுப்புரிமையில் **1/3** ஆக இருக்க வேண்டும்.
- அவசர மாநாடு தவிர, மாநாட்டில் விவாதிக்கப்படும் பிரேரணைகள் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னராவது உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

## 7. மத்திய குழு

- மாநாட்டினால் ஒரு மத்திய குழு நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட முதல் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர், தவிசாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட வேண்டும்.இரு மாநாடுகளுக்கு

இடையில் முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய குழுவுக்கு உண்டு.மத்திய குழு 20 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். மத்திய குழுவில் குறைந்தது மூன்று பேர் பெண் சகோதரிகளாக இருக்க வேண்டும்.

- மாநாட்டின் போது, பல்வேறு துறைசார் அடிப்படையில் பெயர் முன்மொழிவுகள் கோரப்பட்டு, இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்.இரு மாநாடுகளுக்கு இடையில் ஏற்படும் வெற்றிடங்கள் மத்திய குழுவால் தெரிவு செய்யப்பட வேண்டும். இங்கு, மத்திய குழுவிற்குப் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- மத்திய குழுவின் செயற்பாடுகள் ஐந்து குழுக்களைக் கொண்டிருக்க வேண்டும். மாநாட்டிற்குப் பிறகு நடைபெறும் முதல் கூட்டத்தில் அமைப்புக்குழு மற்றும் ஏனைய குழுக்களின் செயலாளர்கள், மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- மத்திய குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு அதன் உறுப்பினர்களில் 1/3 பங்கு கூட்ட நிறைவெண்(கோரம்) இருக்க வேண்டும்.
- தொடர்ச்சியாக மூன்று தடவைகள் அறிவிக்காமல் மத்திய குழுவிற்கு வருகை தராத உறுப்பினர்களின் மத்திய குழு உறுப்பினர் பதவி நீக்கப்ப்படும்.
- மாவட்டச் செயலாளர்கள் மத்திய குழுவில் பார்வையாளர் மட்டத்தில் பங்கேற்கலாம்.

## 8. அரசியல் குழு

- தன்னார்வத்தின் பேரில் அல்லது பதவி நீக்கப்படும் போது, அடுத்த மாநாடு வரை வெற்றிடம் ஏற்படும் பதவிகளை நிரப்பும் அதிகாரம் மத்திய குழுவுக்கு உண்டு.ஐந்து குழுக்களின் செயலாளர்களுடன் மேலும் 06 மத்திய குழு உறுப்பினர்களைக் கொண்டு அரசியல் குழு அமைய வேண்டும். பெண் பிரதிநிதித்துவம் இங்கு கட்டாயமானது.அரசியல் குழு வாரந்தோறும் கூட வேண்டும்.கூட்டமைப்பின் பிரதான செயல்பாடுகளைத் திட்டமிடுதல், அரசியல் முன்னேற்றங்கள், அபாய வாய்ப்புகள், எதிர்கால நோக்கு, திட்டமிடல், சர்வதேச விவகாரங்களைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை இதன் கடமைகளாகும்.இரு மத்திய குழுக்கூட்டங்களுக்கு இடையில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் நிறைவேற்றுக் குழுவான அரசியல் குழுவிற்கு வழங்கப்படுகிறது.

## 9. அமைப்புக் குழு

உறுப்புரிமையை நிர்வகித்தல், அமைப்புக் கிளைகளை நிறுவுதல், மாவட்ட மற்றும் கிளை அமைப்புகளின் செயற்பாடுகளை வழிநடத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் , உறுப்பினர் பதிவுகளைப் பேணுதல், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளுதல் இதன் கடமையாகும்.

10. நிதிக்குழு

- நிதிச் செயலாளரையும் மேலும் மூன்று உறுப்பினர்களையும் நிதிக்குழு கொண்டிருக்க வேண்டும்.நிதியைத் திரட்டுதல், உறுப்பினர் சந்தா கட்டணங்களைச் சேகரித்தல், முன்னணியின் வளப் பதிவைப் பேணுதல், வளங்களைப் பெறுவதற்கான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல், மாதாந்தம் மத்திய குழுவில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல்.
- உறுப்பினர்கள் கணக்கீட்டுப் புத்தகங்களைப் பரிசோதிக்க விரும்பினால், 3 வாரங்களுக்கு முன்னதாக அதற்கான கோரிக்கையை விடுக்க வேண்டும். அதற்காகக் குறைந்தது 10 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவாக இருக்க வேண்டும்.

11. தொழில்சார் குழு

- தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்த முடிவுகளை எடுப்பது இக்குழுவின் பொறுப்பாகும்.தொழில்சார் செயலாளருடன் மேலும் நான்கு உறுப்பினர்கள் இதில் அங்கம் வகிப்பர்.மத்திய குழுவிற்கு வெளியேயுள்ள தொழிற்சங்கத் தலைவர்களை இணைத்துக்கொள்ள இக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

12. வெகுஜன குழு

- வெகுஜன குழுவின் செயலாளரையும் மேலும் 04 உறுப்பினர்களையும் இக்குழு கொண்டிருக்க வேண்டும்.தொழிற்சங்கங்கள், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சமூக அடிப்படையிலான போராட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் போராட்டக் களத்தில் உள்ள தலைவர்களை அரசியல் ரீதியாக வென்றெடுப்பதற்கான திட்டமிடல் இக்குழுவின் பொறுப்பாகும்..

13. கல்வி / தகவல் தொடர்பு

- அரசியல் குழுவின் வழிகாட்டுதலின்படி அமைப்புக் குழுவினால் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

14. ஒழுக்காற்றுக் குழு

- மாநாட்டினால் நியமிக்கப்படும் மூன்று பேர் கொண்ட சுயாதீன குழுவாக இதுசெயற்படும்.இரு மாநாடுகளுக்கு இடையில் கூட்டமைப்பின் ஒழுக்காற்றுப்

பிரச்சினைகளை விசாரித்து, இரண்டு மாதங்களுக்குள் முடிவுகளை அறிவிக்க வேண்டும்.இக்குழுவிற்கு பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமானது.

**15. கணக்காய்வுக் குழு**

- கூட்டமைப்பின் கொடுக்கல் வாங்கல்களைத் கணக்காய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மாநாட்டினால் ஒரு கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட வேண்டும்.

**16. முடிவெடுத்தல் மற்றும் செயற்படுத்துதல்**

- கட்சியின் அனைத்து சபைகளிலும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தவும், புதிய கருத்துக்களுக்கு மற்றவர்களை இணங்கச் செய்யவும் முழுச் சுதந்திரம் உண்டு.முடிவெடுக்கும் போது, அவரது கருத்தின்படி எடுக்கப்படும் முடிவுகளைச் செயல்படுத்த ஒவ்வொரு உறுப்பினரும் கடமைப்பட்டுள்ளார்.

**17. யாப்பிற்கான திருத்தங்கள்**

- யாப்பிற்கான எந்தவொரு திருத்தத்தையும் கட்சி மாநாட்டில் பிரேரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே செயற்படுத்த முடியும்.அதற்காக, வருகை தந்த உறுப்பினர்களில் **2/3 பங்கு** வாக்களிப்பு தேவை.

**செயலாளர்**
**2024 ஆகஸ்ட் 19**